[9th November 1966

Pond works

* 548 Q.—Sri S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of pond works sanctioned in Palayam Block in Vedasandur Constituency;

(*b*) the amount spent on the pond works; and

(*c*) the number of ponds which have been completed?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) குளம் குட்டை அமைக்கும் எட்டு வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ) 50,503 ரூபாய் (ஐம்பதாயிரத்து ஐநூற்று மூன்று ரூபாய் மட்டும்).

(உ) பணிகள் எட்டும் நடந்தேறி வருகின்றன. அவை இன்னும் முடிவடையவில்லை.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : தலைவர் அவர்களே, இந்த வேலைகளெல்லாம் மூன்று வருஷ காலமாக முடிக்காமல் இருப்பதால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். வேலைகளை உடனடியாக முடிக்க உடனே உத்தரவு இடுவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விரைவாக முடிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பிரயாணப்படி

* 549 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்
9-00 a.m. பாரா—

(அ) உணவு உற்பத்தித் துறையில் பணிபுரியும் தலைமைக் கூலி, மேஸ்திரி ஆகியவர்களுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உணவு உற்பத்தி வட்டங்களில் பணிபுரியும் தலைமைக் கூலி, மேஸ்திரி ஆகியோருக்குப் பயணப்படி கொடுக்கப்படுவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த உணவு உற்பத்தி வட்டங்களில் பணிபுரியும், தலைமைக் கூலி, மேஸ்த்திரி முதலியவர்கள் தற்போது அடையும் பிரயாணப்படி போதவில்லை, மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்கிறார்கள். அவர்கள் அதிக தூரம் தாலூகாவில் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை உயர்த்த பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது டெம்பரரியாக நியமிக்கப்பட்ட மேஸ்திரி, தலைமைக் கூலி இவர்கள் பற்றியது. அவர்களுக்கு அதிகமாகக் கொடுப்பதற்கில்லை.